# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்: 6** **தேதி:- 03.12.2014**

## மாநில நிர்வாகத்துடன் பேட்டி

அன்பார்ந்த தோழர்களே,

02.12.2014 அன்று தலைமைப் பொது மேலாளர் அவர்களை மாநிலச் சங்கத்தின் சார்பாக சந்தித்தோம். இந்த பேட்டியில் மாநிலத்தலைவரும், அகில இந்திய உதவி பொதுச் செயலருமான தோழர் S.செல்லப்பா, மாநிலச்செயலர் தோழர் A.பாபுராதாகிருஷ்ணன், மாநில உதவிச்செயலர் தோழர் M.முருகையா, மாநிலப் பொருளர் தோழர் K.சீனிவாசன் மற்றும் மாநில உதவிபொருளர் தோழர் R.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கீழ்கண்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன.

1. **தோழர் K.வனராஜன், TTA தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் தோழர் K.வனராஜன் TTA அவர்களை தூத்துக்குடியிலிருந்து கோவில்பட்டிக்கு Long Standing என்ற அடிப்படையில் திடீரென மாற்றல் உத்தரவு வெளியிட்டுள்ளது. மாற்றல் கொள்கையின் அடிப்படையில் ஏப்ரல் மாதத்தில்தான் மாற்றல் உத்தரவு வழங்கப்பட வேண்டும். தலைமைப் பொது மேலாளரிடம் எழுத்துப் பூர்வமாக நமது வாதங்களை கொடுத்தோம். இந்த உத்தரவு ரத்து செய்யப்படவேண்டும் என்பதே நமது நிலை. தலைமை பொது மேலாளர் அவர்கள் உடனடியாக தலையிடுவதாக உறுதி அளித்துள்ளார்.

2. **கடலூர் மாவட்டம் நெய்வேலியில் NLC குடியிருப்பு பிரச்சனை.**

NLC குடியிருப்பில் நமது BSNL ஊழியர்கள் குடியிருக்கின்றனர். 2 ஆண்டுகளுக்கு முன்பாக BSNL நிர்வாகம் தனது ஊழியர் குடியிருப்பு காலியாக இருப்பதால் NLC குடியிருப்பில் வசிப்போர் காலி செய்ய வேண்டுமென உத்தரவு வெளியிட்டது. மாநில கவுன்சிலில் இப்பிரச்சனை பேசப்பட்டது. இறுதியாக NLC குடியிருப்பில் வசிப்போர் தொடர்ந்து வசிக்கலாம் எனவும், அந்த ஊழியரின் HRAவை BSNL நிறுவனம் பிடித்தம் செய்து கொள்ளலாம் எனவும், NLC குடியிருப்புக்கான வாடகையை அந்த ஊழியர் சம்பளத்தில் பிடித்தம் செய்யலாம் எனவும் முடிவானது. அன்று இருந்த தலைமை மேலாளர் இந்த முடிவை அமல்படுத்த கடலூர் பொது மேலாளருக்கு வலியுறுத்தினார். பிரச்சனை அன்று முடிவுக்கு வந்தது. ஆனால் தற்போது எழுத்துப் பூர்வமாக உத்தரவு வேண்டும் என கடலூர் மாவட்ட நிர்வாகம் வலுயுறுத்துகிறது. வழிகாட்டுதல் உத்தரவு வெளியிட தலைமைப் பொது மேலாளரிடம் கோரினோம். நமது கோரிக்கையை ஏற்று உத்தரவு வெளியிட தலைமை பொது மேலாளர் ஒப்புக் கொண்டார்.

3. **வால்பாறை, துடியலூர் CSC-ல் Franchisee பிரச்சனை.**

கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை ஒரு மலை நகரமாகும். இங்கு தனியார் நிறுவனங்கள் பெரிய அளவிற்கு சேவை கொடுப்பதில்லை. BSNL நிறுவனம் தான் No.1 இடத்தில் உள்ளது. இங்கு உள்ள CSC-ல் மாதம் ஒன்றுக்கு சுமார் 7½ லட்சம் ரூபாயை நமது ஊழியர்கள் வருவாயாக ஈட்டிவருகின்றனர். நமது BSNL சேவைகளுக்கு இன்றும் தேவை உள்ளது. ஆனால் திடீரென நமது CSC-ல் Franchisee ஒருவரை சேவை கொடுக்க நிர்வாகம் அனுமதித்துள்ளது. இதனால் நமது வருமானம் ஒரு லட்சமாக குறைந்து விட்டது. நமது CSCக்குள் Franchisee ஐ விற்பனை செய்ய அனுமதிக்கக்கூடாது என்பதே நமது நிலை. அதே போல் தற்போது CSC Category III-ல் தமிழகத்தில் சிறந்த CSC ஆக தேர்வு செய்யப்பட்டுள்ள துடியலூர் CSC-லும் Franchisee விற்பனை செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார். நமது சேவையை திறம்பட செய்யக்கூடிய

ஊழியர்களுடைய உணர்வுகளை நிர்வாகம் புரிந்துகொள்ளவில்லை. நிர்வாகத்தின் இந்த செயலால் ஊழியர்களுடைய செயல் திறன் குறையும். நம்பிக்கையின்மை அதிகரிக்கும். தலைமைப் பொது மேலாளரிடம் இதை சுட்டிக்காட்டினோம். Franchisee நமக்கு எதிரி இல்லை. மாறாக Franchisee BSNL சேவைகளை நமது அலுவலகத்திற்கு வெளியே இருந்து விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். தலைமைப் பொது மேலாளர் அவர்கள் கோவை மாவட்ட நிர்வாகத்தோடு விவாதித்து வழிகாட்டுதல் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

**GM (HR) உடன் கீழ்கண்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன.**

1. தமிழ் மாநிலத்தில் பல மாவட்டங்களில் டெண்டர் எடுத்துள்ள Innovative Security Services தொழிலாளர் நலச் சட்டங்களை முறையாக அமல்படுத்துவதில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம். குறிப்பாக பாண்டிச்சேரி மாவட்டத்தில் இந்த ஆண்டு போனஸ் இன்னமும் வழங்கப்படாததையும், கடலூர், பாண்டிச்சேரி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் முறையான காலத்தில் வழங்கப்படாததையும் சுட்டிக்காட்டினோம். இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க மாநில நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது.
2. திருச்சி தோழர் கோபியின் மாற்றல் உத்தரவில் மாறுதல் கோரியுள்ளோம். மாநில நிர்வாகம் ஏற்றுக்கொண்டு திருச்சி நிர்வாகத்திற்கு வழிகாட்டுதல் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளது.

**DGM (HR) உடன் கீழ்கண்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன.**

1. RGM TTC-ல் TTA பயிற்றுனர் நியமனத்தில் இட ஒதுக்கீடு முறையாக அமல்படுத்த வலியுறுத்தியுள்ளோம். நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளது.
2. புதுச்சேரி தோழர் ராஜேஸ்வரி முல்லோளி, RM அவர்களின் தற்காலிக மாற்றல் கேரளாவிலிருந்து புதுச்சேரிக்கு நீட்டிக்க கோரினோம். கேரள மாநிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.
3. குன்னூர் தோழர் S.ராஜன், TM அவர்களுக்கு குன்னூரிலிருந்து தூத்துக்குடிக்கு தற்காலிக மாற்றல் கோரினோம். நிர்வாகம் ஏற்றுக்கொண்டு உத்தரவு வெளியிடுவதாக ஒப்புக்கொண்டது.
4. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள தோழர் சண்முகசுந்தரம் , TTA அவர்களின் பயிற்சி கால உதவித்தொகை குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும், இது போல பல தோழர்களுக்கு உதவித் தொகையில் வேறுபாடு உள்ளது என்பதையும் மாநில நிர்வாகத்திடம் சுட்டிக் காட்டப்பட்டது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தோழர் கௌரி செல்வராஜ், STS புதுச்சேரி மற்றும் தோழர் பால்ராஜ், TM திருப்பூர் ஆகியோரின் மருத்துவ பில்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. விரைவில் தீர்வுகாண நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பிரச்சனைகளை சுமூகமாக தீர்ப்பதற்கு ஒத்துழைத்த மாநில நிர்வாகத்திற்கு நமது மாநிலச் சங்கத்தின் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
மாநிலச் செயலர்